திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டு வரை மீட்டர் கேஜ் ரயில் பாதை, இரண்டாவது ரயில் திட்டத்தை சென்ற ஆண்டே துவக்கி கல்வெர்ட்கள் எல்லாம் கட்டப்பட்டு, சென்ற ஆண்டு நடந்த வேலைகள் இந்த ஆண்டு சற்று குறைவான வேகத்தில் நடப்பதற்கு என்ன காரணம்? நிதிப் பற்றாக்குறை என்றால் இந்த ஆண்டிலாவது அதைச் சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்திருக்கிற குறிப்பைப் பார்த்துதான் சொல்ல முடியும். காரணம் ரயில்வே துறையே நேரடியாகப் பார்த்து வருவதால் குறிப்புகளை வாங்கி அவர்கள் கொடுக்கிற தகவல் களைத்தான் நாம் கொடுக்கிறோம். காலதாமதம் இருக்கிறதா, இல்லையா என்பது கேள்வி. அப்படியிருந்தால் அதற்கு என்ன காரணம் என்பதற்கான விளக்கம் இப்போது என்னிடத்தில் இல்லை. ஆனால் அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்பு இந்த நடப் பாண்டில் முடிக்கப்படும் என்ற கருத்தை அவர்கள் தெரிவித்திருக் கிறார்கள். எனவே வேகமாக நடைபெறும். விரைவாக முடிக்க வேண்டுமென்று அவர்களுக்கு வேண்டுமானால் அந்தக் கருத்தைத் தெரிவித்து இந்த ஆண்டில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளலாம்.

நத்தம் தொகுதி, மடூர் ஊராட்சி, புகையிலைப்பட்டிக்கு திண்டுக் கல்லில் இருந்து போக்குவரத்துக் கழகப் பேருந்து.

376—(*வினா எண் 13050) திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

நத்தம் சட்டமன்ற தொகுதியில் உள்ள மடூர் ஊராட்சி, புகையிலைப்பட்டிக்கு திண்டுக்கல்லிலிருந்து புகையிலைப்பட்டி, வடமதுரை வழியாக ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா?

1987 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லிலிருந்து புகையிலைப்பட்டி வழியாக சிங்காரக்கோட்டைக்கு தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த நகரப் பேருந்து ஒன்று தற்சமயம் ஓடிக் கொண்டிருக்கிறது. இதை வடமதுரை வரை நீட்டித்து ஓட்டுவதற்கு உரிமையாளரால் மனுச் செய்யப்பட்டு திண்டுக்கல் வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. வடமதுரை வரை இவ்வழித்தடம் நீட்டிக்கப்படும்பட்சத்தில் புகையிலைப் பட்டி பொதுமக்கள் வடமதுரை சென்று வருவதற்கு நேரடிப் பேருந்து வசதி கிடைத்துவிடும். எனவே கேட்டுக்கொண்டுள்ள வழித்தடத்தின் மூலம் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பேருந்து வசதி தேவையில்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவர் அவர்களே, தனியார் பஸ் அங்கே ஓடிக்கொண்டிருக்கிறபோது அது பிரேக்டவுனாகி பொதுமக்களுக்கு பாதகமான சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் புகையிலைப்பட்டிக்கு திண்டுக்கல்லிலிருந்து வடமதுரை வழியாக பேருந்து விடவேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தி அங்கே பேருந்து விடுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தனியார் பேருந்தைவிட போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் வந்தால் தடையில்லாமல் ஓடுமென்று அவர்கள் ஒப்புக்கொண்டமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து அவசியத்தைப் பொறுத்து அந்த வண்டிகள் பிரேக் டவுன் அதிகமாக ஆகிற சூழ்நிலை இருக்கிறதென்று தெரியுமானால் அதற்கான நடவடிக்கையை எடுக்கச் சொல்லலாம்.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவர் அவர்களே, நத்தத்திலிருந்து வி.எஸ். கோட்டைக்கு இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஓடிக்கொண்டிருக்கிறது. அதை மேலும் மார்க்கம்பட்டி, நிலப்பட்டி வழியாக திருமலைச்சேரி, செங்குறிச்சி வரையில் சென்று வர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அவசியம் இருந்தால் நாம் இங்கேயிருந்து சொல்ல வேண்டியதில்லை. அவர்களே செய்வார்கள். ஒருவேளை உங்களுக்கு அவசியமாக இருக்குமானால் நீங்கள் தனியாக கடிதம் எழுதிக் கொடுத்தால் அதுபற்றி நடவடிக்கையெடுக்கச் சொல்லலாம்.

தமிழகத்தில் ஆதி திராவிட மாணவர்களுக்கு இ. கார்டு வழங்கல்.

378—(*வினா எண் 9522) திரு. சா. ஜெயச்சந்திரன் மற்றும் திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பிளஸ்-1-லிருந்து கல்லூரி வரை பயிலும் ஆதி திராவிட மாணவர்களுக்கு இ. கார்டு (எலிஜிபிலிடி கார்டு) மீண்டும் வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஆர். கணபதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் அது பரிசீலனை செய்யப்படுமா? தமிழ் நாட்டில் எத்தனை மாணவர்களுக்கு இதுவரையில் இது வழங்கப்பட்டது என்பதையும், மேலும் விரிவுபடுத்துகிற திட்டம் பரிசீலனையில் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, எலிஜிபிலிட்டி கார்டை பொறுத்தவரையில் ஆதி திராவிட மாணவர்கள், கல்லூரியில், பள்ளிக்கூடத்தில் படிக்கிறபோது அவர்கள் ஸ்காலர்ஷிப் வாங்குவதற்கும், பீஸ் கட்டாமல் படிப்பதற்கும் முன்னாலே கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது கல்லூரி நிறுவனத்தைப் பொறுத்து பிரின்சிபாலிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் அந்தக் கல்லூரியில்